

ராணி காமிக்ஸ்
இன்ஸ்பெக்டர்
ஆசாத்
துப்பறியும்
கொள்ளைக்கூட்டம்!
பொங்கல் மலர்

ராணி காமிக்ஸ்—38
(மாதம் இருமுறை இதழ்)

ஜனவரி 15—31
1986

சூப்பர் ஹீரோ டைகர் தான் பறக்கும் கிறிஸ்துமஸ் பரிசு!

கோடீஸ்வரர் கோவார்ட்

அதிரடி ஏஜெண்ட் டைகர்

வெடிகுண்டு நிபுணர் ஹென்றி

உலகம் முழுவதும் பல்வேறு நாச வேலைகளைச் செய்ய "உலக பயங்கரவாதிகள் இயக்கம்" ஒன்று தீவிரமாக நடந்து வந்தது.

அந்த இயக்கத்தினர் அராஜக செயல்களை முறியடிக்க "சர்வதேச பயங்கரவாதிகள் ஒழிப்பு நிறுவனம்" ஒன்று அனைத்து நாட்டு அரசுகளின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் தலைவராக மிஸ்டர் "எக்ஸ்" என்பவர் இருந்து வந்தார். ரகசிய உளவுத்துறை வேலைகளிலும், தீவிரவாதிகள் ஒழிப்பு வேலைகளிலும் பழுத்த அனுபவம் கொண்டவர் அவர்.

அவர் தலைமையின் கீழ் "பயங்கரவாதிகள் ஒழிப்பு நிறுவனம்" மும்முரமாக வேலை செய்து வந்தது. அதில் பல தலைசிறந்த துப்பறியும் வீரர்களும், அதிரடி உளவாளிகளும் பணியாற்றி வந்தனர். அவர்களில் தலைசிறந்தவர்கள் டைகரும் ஹென்றியும்.

பயங்கரவாதிகள் பல்வேறு நாச வேலைகளில் ஈடுபட்டு வந்த போது, ஒரு நாள்... ..

நியூயார்க் நகரம். கிறிஸ்துமஸ் நெருங்கிக்கொண்டு இருந்தது. அதனல் பனி பெய்தாலும் பஜார் ஜே ஜே என்றிருந்தது.
அம்மா! இன்னொரு கிறிஸ்துமஸ் தாத்தா!
நியூயார்க் முழுவதும் இப்படி கிறிஸ்துமஸ் தாத்தாக்கள் நிறைந்து உள்ளனர். கடந்த ஆண்டைவிட அதிகம்!
நியூயார்க் நகருக்கு வெளியே இருந்த ஒரு கோடீஸ்வரர் மாளிகையில்—
எஸ் மாஸ்டர்! எல்லாம் தயார். இன்னும் 2 மணி நேரத்தில் நியூயார்க் பொடிப் பொடி ஆகும். பயங்கரவாதி இயக்கத்தின் கிறிஸ்துமஸ் பரிசு!
ஒரு ஓட்டல் அறையில் டைகரும் வெடிகுண்டு நிபுணர் ஹென்றியும் அதை கேட்டுக்கொண்டு இருந்தனர்.
அந்த கோடீஸ்வரர் கோவார்ட் ஒரு துரோகி. அவர் வீட்டில் ஒரு மைக்ரோ போனை வைத்தது நல்லதா போய்விட்டது.
அந்த ஒட்டு கேட்கும் கருவி இப்போ நமக்கு பயன்படுது. அவரது நாசகார திட்டத்தை இன்னும் 2 மணி நேரத்துக்குள் முறியடிக்க--கணும்!

கொஞ்ச நேரத்தில் கலைமான்கள் இழுக்க ஒரு பனிசறுக்கு வண்டி கோமஸ்வரர் கோவார்ட் மாளிகைக்குள் நுழைந்தது.
ஏய் நில்! உள்ளே போகாதே!
பிறகு— உள்ளே நுழைந்தவனை நோக்கி காவலர்கள் விரைந்தனர்.
சுடாதே! உயிரோடு பிடி! விஷயம் என்ன என்று தெரியணும்!
அதோ ஓடுகிறான்! பிடி!

அந்த வண்டியில் இருந்த சாக்கு மூட்டையை யாரும் கவனிக்க-வில்லை. அதில் இருந்தது டைகர்!
ஹென்றி நல்லாவே ஓடுகிறார். எனக்கு பாதை சுத்தமா இருக்கு!
சில நொடிகளில்—
நீ டைகர்தானே! என்னைச் சுடாதே!
உன்னை கொல்ல மாட்டேன்! சொல்வதை செய்!
நான் சுட்டது உண்மை ரவை அல்ல. நரம்புகளை மரத்து போகச் செய்யும் மருந்து தோட்டா. அது உன்னிடம் இருந்து உண்மையை கரக்க வைக்கும் சக்திவாய்ந்தது. உம்...உண்மையைச் சொல்.

அப்போது அங்கே டைகர் ஒரு குண்டை வெடித்தார்.
கோமஸ்வரரே! உமக்கு எங்கள் கிறிஸ்துமஸ் பரிசு இதோ!
பாஸ்! அவனைப் பிடித்து விட்டோம்!
ஹென்றி! உங்க கடைசி கண்டுபிடிப்பான கைக்குண்டு வெடித்து, அதன் அற்புத வேலையைச் — செய்யுது!
டைகர்! என்ன அவர்கள் இந்தப் பாடு படுகிறார்கள்!
மூச்சை திணற வைத்து மயங்க வைக்கும் அந்த வாயுவில் இருந்து அரை மணி நேரத்துக்கு அவர்களால் மீள முடியாது.
இந்த வாயுவுக்கு எதிரான ரசாயன பஞ்சை நாம் அப்பப்போ நுகர்ந்து கொள்ளணும். இல்லே
அவர்கள்

இருவரும் ஒவ்வொரு அறையாக சோதனை போட்டனர்.
ரேடியோ தொலைக் கட்டுப்பாடு கருவி!
இதோடு, ரேடியோ அலைகள் மூலம் நூற்றுக்கணக்கான எந்திர கிறிஸ்துமஸ் தாத்தாக்கள் இணைக்கப்பட்டு உள்ளனர். அந்த எந்திர தாத்தாக்கள் அனைத்திலும் வெடிகுண்டு உள்ளது. இன்னும் 30 நிமிடத்தில் வெடிக்கும்.

அதே நேரத்தில் ஹென்றி தன் வேலையைச் செய்தார்!
ஏய்! எங்கே போகிறாய்?
அவை பொம்மை என்று அல்லவா நினைத்தேன். அவைகள் நடக்கின்றனவே!

நகரத்துக்கு வெளியே, ஒரு பயங்கரவாதி போன் பேசினான்.
பாஸ்! ஏதோ தவறு நடந்துவிட்டது. நமது எந்திர குண்டுகள் அனைத்தும் நகரத்துக்கு வெளியே நடை போடுகின்றன. அவை நீங்கள் இருக்கும் இடம் நோக்கி வருகின்றன!

வாயு மயக்கத்தில் இருந்து மீண்ட கோமஸ்வரர்—
நமது எதிர் ஏஜெண்டுகள், எந்திர குண்டுகளின் பாதையை மாற்றி இருக்கணும். அதனால் அவை இங்கே வருகின்றன!
உடனே இங்கே இருந்து நாம் தப்பி ஓடணும்!
பயங்கரவாதிகள் பனி ரோட்டில் தப்பி ஓடினார்கள்.
அதோ ஒரு எந்திர குண்டு! அது எந்த நேரமும் வெடிக்கலாம்! விலகி செல்!
விலக்கி ஓட்டியபோது, கார் கவிழ்ந்தது.
ஐயோ! பனிக்கட்டி பாதையில் நம் கார் சருக்கி கவிழுது!

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

மன்னர்
பீமா
தோன்றும்,
ஏழாவது குகை!

மாமன்னர் பீமா ஆட்சி புரிந்து வந்த சுயம்பு மலை, நீர் வளமும், நில வளமும் சிறக்க செல்வம் கொழித்தது.

தமிழ்நாட்டில் நீலகிரியில் உள்ள அந்த மலையில் இயற்கை எழிலும் கொஞ்சியது.

மன்னர் பீமா இரவில் நகர
சோதனைக்கு செல்வது வழக்கம்.
அப்படி ஒருநாள் போகும்
போது ஒரு வீட்டில் ஒரு
இளைஞன் சாகக் கிடந்தான்.
அவன் இறப்பதற்குள் ஒரு நல்ல
காரியம் செய்தால் அவன்
ஆத்மா சாந்தி அடையும் என்று
மதகுரு கூறினார். அதை
மன்னர் பீமா மறைந்து இருந்து
கேட்டார்.

பிறகு அவர், திருமணத்துக்கு
மறுத்ததால் உயிரோடு எரிக்கப்பட
இருந்த 17 வயது அழகி பிந்துவுக்கு,
அந்த வாலிபனை மணம் முடித்தார்.
அதன் மூலம் அந்தப் பெண்ணை
சாவில் இருந்து காப்பாற்றினார்.
ஆனால் மணமகன் உடனே இறந்து
விட்டதால் பிந்துவை அவள்
விருப்பப்படி தன் நண்பனாக பீமா
தான் வாழும் இடத்துக்கு
அழைத்து வந்தார்.

இந்தச் சுரங்க வழியில் சென்றால் பல பாதாள குகைகளுக்குப் போகலாம்.
இங்கே மொத்தம் 7 குகைகள் உள்ளன.
எனக்கு காட்டுங்களேன்!
இந்தக் குகையில், பல்வேறு மாறுவேடம் போடத் தேவையான ஆடை அணிகள் உள்ளன.
ஆ! இங்கே பலவகை ஆயுதங்கள் உள்ளன!
ஆனால் பிந்து ஏழாவது குகையை அடைந்ததும், ஆச்சரியத்தால் அதிர்ந்து போய்—
மாமன்னரே! என்ன ஆச்சரியம்! என் கண்களையே என்னால் நம்ப முடிய வில்லையே!

தீப்பந்த வெளிச்சத்தில் இருவரும் குகைக்குள் சென்றனர்.
பிந்து! எங்கள் மூதாதையரும், நானும் இரட்டிய வைரம், வைடூரியம், தங்க ஆபரணங்கள், இவை!
ஆகா! இவற்றிற்கு விலை மதிப்பே கிடையாது!
இவற்றை பார்த்து பைத்தியம் ஆகிவிடாதே!
வைரம், முத்து, மாணிக்கம், தங்க ஆபரணங்கள் நிறைந்த அந்தக் குகையில் அவர்கள் கவனத்தை ஒரு சத்தம் திருப்பியது.
அது என்ன சத்தம்?

ஹம்ம்..ம்..ம்
இந்த மர்ம உறுமல் சத்தம் பயத்தை கொடுக்குது, மன்னரே!
இருவரும் மேலே வந்து பார்த்தபோது—
மன்னரே, அதோ!
நெருப்பு பறவை!
ஹம்ம்..ம்..ம்
மன்னரே! அது நம்மை நோக்கி வருது!
தரையோடு படுத்துக் கொள்!

அந்த நெருப்புப் பறவை அவர்கள் தலைக்குமேல் பறந்து போனது. அதன் வழியில் நெருப்பு ஜுவாலை வாலாக நீண்டது!
இது பயங்கரமான ராட்சத பறவை!
அந்த மர்ம நெருப்புப் பறவை போன திக்கை பார்த்தபடி இருவரும் எழுந்து உட்கார்ந்தனர்.
மன்னரே! அதோ அங்கே பாருங்க!
அந்த நெருப்புப் பறவை மாயமாய் மறைந்துவிட்டதா?
இடீர் என்று வானத்தில் பயங்கர வெடிச் சத்தம் கேட்டது. அந்த நெருப்புப் பறவை வெடித்து சிதறியது.
காதை செவிடாக்கும் சத்தம்!
டமால்!

மன்னரே! அது என்ன? அது எப்படி வெடித்தது? மர்மமாக இருக்குதே!
அந்த மர்மத்தை கண்டு பிடிப்போம், வா!
வெடிச் சத்தம் கேட்ட இடத்துக்கு இருவரும் போய் பார்த்தனர். அங்கே கருகிய இரும்பு இடிபாடுகள் தென்பட்டன.
பிந்து! ஒரு ஹெலிகாப்டர் விமானம் வெடித்து இருக்கு!
விமானி என்ன ஆனான்? இறந்துவிட்டானா?
இவ்வளவு பெரிய விபத்தில் உயிர் தப்புவது கடினம்தான்!
பக்கத்தில் எங்காவது உயிரோடு விழுந்து கிடக்கிறானா என்று பார்ப்போம் வா!
மன்னரே! அதோ அங்கே பாருங்க ஒரு கை!

அங்கே மூச்சு பேச்சு இல்லாமல் விழுந்து கிடந்த ஒருவன் அருகே இருவரும் சென்று பார்த்தனர். அவனுக்கு உயிர் இருக்கிறதா என்று மன்னர் பீமா பார்த்தார்.
நாடித் துடிப்பு இருக்கு. உயிரோடுதான் இருக்கான், மயக்கம்!
மன்னரே! இங்கே இன்னொருவன் கிடக்கிறான்!
அம்மா!
பிந்து இருவரையும் தூக்கிப் போய் மயக்கம் தெளிவிப்போம்!
இருவரும் ஆளுக்கு ஒருவராக தூக்கிக்கொண்டு அருகில் இருந்த ஊருக்கு போனார்கள்.

அங்கிருந்த மலைஜாதி வைத்தியரிடம் மன்னர் பீமா, விஷயத்தைக் கூறினார். வைத்தியர் சிகிச்சை அளித்தார்.
இந்த மருந்தை கொடுங்க. நாளை காலை சரியாகிவிடும்!
பிறகு இருவரையும் பீமா, தம் இருப்பிடம் கொண்டு வந்தார்.
தண்ணீர்! நான் எங்கே இருக்கிறேன்?
இருவரில் ஒருவன் மயக்கம் தெளிந்தான்.
யார் நீ? க்ளக் க்ளக்.
நீங்க நல்லா ஓய்வு எடுத்துக்கணும் என்று வைத்தியர் கூறி உள்ளார்.

தண்ணீர் குடித்தபின், அவன் மீண்டும் மயக்கம் அடைந்தான்.
மன்னர் பீமா ஒரு மரத்தில் படுத்து ஓய்வு எடுத்தார். மாருதி என்ற குரங்கு காவல் இருந்தது. அங்கே பிந்து வந்தாள்.
பிந்து! என்ன விசேடம்?
இருவரும் மயக்கமாகவே இருக்காங்க. மயக்கம் தெளிந்ததும் அவர்கள் சாப்பிட ஏதாவது வேண்டும்.
அதனல் பழங்கள் கொண்டு போக வந்தேன்.
குடிசையில்—
சின்னு! சின்னு! எழுந்திரு. எழுந்திரு.

குலாம்! நாம் எங்கே இருக்கிறோம்?
சொர்க்க புரியில் இருக்கோம், சின்னு!
நான் மயக்கம் தெளிந்தபோது ஒரு தேவதையைப் பார்த்தேன்.
அதோ அவள்தான், அது!
பசியா இருப்பீங்க! ரெண்டு பேரும் இதை சாப்பிடுங்க!
நன்றி பெண்ணே! யார் நீ?
என் பெயர் பிந்து. சுயம்பு மலை மாமன்னர் பீமாவின் கூட்டாளி!

சின்னு! அவள் எவ்வளவு அழகாக இருக்கிருள். அவள் நடப்பது நடனம் ஆடுவது போல் இருக்கு!
சீ! வாயை மூடு!
இருவரும் பழங்களை சாப்பிட்டனர். பிறகு, அந்தக் குடிசையைவிட்டு வெளியே வந்து நடக்க ஆரம்பித்தனர்.
தங்க பிஸ்கட்டுகளை தேடி புறப்பட்டோம். இப்போ இந்த வனந்திரத்தில் மாட்டிக்கொண்டோம்!
இந்த இடம் எது என்று உனக்கு தெரிகிறதா?
நாம் வந்த விமானத்தில் திடீர் என்று கோளாறு ஏற்பட்டது. அதனல் திசை தவறி பறந்தது.

இந்த வரைபடத்தை வைத்து பார்க்கும் போது இந்த இடத்தில்தான் நாம் இருக்க வேண்டும். இனி இங்கிருந்து போக வழியை பார்ப்போம்.
இதோ நமது ஹெலிகாப்டர் நொறுங்கி கிடக்கும் காட்சி!
விமானம் தூள் தூளாக நொறுங்கி விட்டது. நாம் இருவரும் உயிர் தப்பியது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.
விமானியின் கேபின் அறை பத்திரமா இருக்கு!
அப்படியானால் நமது துப்பாக்கிகள் அங்கேதான் இருக்கும்! தேடிப் பார்ப்போம்!
குலாமும், சின்னுவும் விமான கதவை திறந்தபோது உள்ளே இருந்து ஒரு குரல் கேட்டு திடுக்கிட்டனர்!
ஆ! யார் நீங்க?
இதோ உங்க துப்பாக்கி! எடுத்துக் கொள்ளுங்க!

நான் பீமா! இந்த மலே சாம்ராஜ்ஜியத்தின் மாமன்னன். நீங்க என் விருந்தாளிகள்.
இரு கடத்தல்காரர்களும் மன்னரைப் பார்த்து பதறி நின்றனர்.
மன்னர் அவர்கள் இருவரையும் அழைத்து வந்து, அந்த குடிசையில் இருக்கச் செய்து உபசரித்தார். அன்று இரவு—
குலாம்! இந்த இடத்தில் பல மர்மங்கள் உள்ளன!
என்ன சொல்கிறாய்?
அந்த மயில் சிம்மாசனத்தின் பின்புறம் ஒரு ரகசிய பாதை இருக்கு! அதை நான் பார்த்தேன்.
அது எங்கே போகிறது?

அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.
சிம்மாசனத்தின் பின்புறம் தொடங்கிய சுரங்க வழியில் நுழைந்தனர்.
குகை ஒரே இருட்டா இருக்கே!
உன்னிடம் சிகரெட்டு லைட்டர் இருந்ததே.
குலாம் லைட்டரை கொளுத்தினான்.
இந்தச் சுரங்கப் பாதையில் எத்தனை குகைகள் உள்ளன!
இந்த குகையில் மாறுவேட பொருட்கள் உள்ளன.
இதுதான் கடைசி குகை. இது எப்படி ஜொலிக்குது!
கடத்தல்காரர்கள் இருவரும் உள்ளே நுழைந்தனர்!
வாவ்! என்னால் நம்ப முடியவில்லை. விலை உயர்ந்த வைரம், வைடூரியம். தங்க ஆபரணங்கள். வெளி உலகுக்கு தெரியாத அற்புத புதையல்!

பொன் ஆசை, பெண் ஆசை இவற்றின் மொத்த உருவமான குலாம், அந்த செல்வ குவியலைப் பார்த்து ஆனந்தம் அடைந்தான். அவன் மனதில், பல பேராசை திட்டங்கள் பிரசவித்தன.
ஏ! குலாம்! அப்படியே மயங்கி விட்டாயே! சுயநினைவுக்கு வா! நாம் வெளியேற வேண்டும்!
நீ போ! இதைவிட்டு வர மாட்டேன்!
மன்னர் பீமாவை மறந்து விட்டாயா? நாம் இங்கு இருப்பதை அவர் கண்டு பிடித்தால், நாம் சூரிய உதயத்துக்குள் பரலோகம் போய்விடுவோம்.
பேராசை பிடித்த குலாம்மை, சின்னு வலுக்கட்டாயமாக வெளியே கொண்டு வந்தான்.
சின்னு! என்னை மன்னித்துவிடு. அந்த வைரக் குவியலைப் பார்த்த என் மனம் பேதலித்து விட்டது!
பொன்னைப் பார்த்தால் மட்டும் அல்ல. பெண்ணைப் பார்த்தாலும் உனக்கு பித்து பிடித்துவிடுகிறது!

நான் சொல்றத கவனமா கேளு!
இரவு நாம் ஒரு பை நிறைய வைரங்களை அள்ளிக்கொண்டு, இங்கிருந்து தப்பி ஓடிவிடுவோம்!
அந்தப் பெண்? அவள் தான் பிந்து! அவளை என்ன செய்ய?
அவளை நமது வழிகாட்டியாக அழைத்து போவோம்.
நீ என்ன சொல்கிறாய்?
இந்த வனாந்திரத்தில் நமக்கு பாதை தெரியாது. அதனால், நமக்கு வழிகாட்ட அவளை கடத்திப் போவோம்.
எப்படியோ, அவளை நம்முடன் கொண்டு போகணும்!

அன்று இரவோடு இரவாக ஒரு பை நிறைய வைரங்களையும், அழகி பிந்துவையும் கடத்திச் சென்று விட வேண்டும் என்று கடத்தல் பேர்வழிகள் இருவரும் ரகசிய திட்டம் தீட்டிய பின், அவர்களிடம் மன்னர் பீமா வந்தார்.
உடல்நலம் சீரடைந்துவிட்டால் நீங்க புறப்படலாம். உங்களுக்கு 2 குதிரை தருகிறேன்.
மன்னர் அவர்களே! உங்களுக்கு நாங்க கடமைப்பட்டு உள்ளோம்.
ஆனா, நாங்க இன்னும் ஒருநாள் ஓய்வு எடுக்க விரும்புகிறோம்.
ஓ, தாராளமாக!
இன்று பௌர்ணமி. நிலா வெளிச்சத்தில், திறந்த மைதானத்தில் மலை ஜாதியினர் கொண்டாடுவர்!
வாத்திய இசைக்கு ஏற்ப ஆடிப்பாடி மகிழ்வார்கள்.
நீங்க விரும்பினால், அந்த ஆட்ட பாட்டத்தில் கலந்து கொள்ளலாம்!
மாமன்னரே! அப்படியே செய்கிறோம்!

அன்று இரவு—
பால் நிலா காய்ந்தது. மலைஜாதி மக்கள் ஒரு மைதானத்தில் கூடி குதூகலித்தனர். ஆட்ட பாட்டம் தொடங்கியது.
இந்த கேளிக்கை இரவு முழுவதும் நடக்கும் என நினைக்கிறேன்.
பிந்து எவ்வளவு அழகா ஆடுகிறாள்!
மலைஜாதி ஆண்களும் பெண்களும் ஆடிக் களித்ததை இருவரும் பார்த்தனர்.
குலாம்! வைரங்களுடன் தப்பிப் போக இதுவே தக்க தருணம்!
பிந்துவை மறந்து விட்டியா?

நம்மிடம் வரைபடம் இருக்கு. எனவே அவள் இல்லாமல் நாம் போய்விட முடியும்.
வேண்டாம்! அவளும் வரணும். இல்லே, நாம் இங்கேயே இருப்போம்!
பிந்துவை அழைத்துச் செல்ல வேண்டுமா வேண்டாமா என்பதில் சின்னு, குலாம் இருவர் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட, இருவரும் ஒதுங்கி நின்று பேசினர். அவர்களிடம் மலேமன்னர் பீமா வந்து—
உங்க இருவருக்கும் இந்த ஆட்ட பாட்டம் பிடிக்கவில்லே போல் தெரிகிறது!
ஆட்டமும் பாட்டமும் படு அமர்க்களம்!
ஆனு நாங்க களேப்பா உணர்கிறோம். கொஞ்சம் ஓய்வு எடுத்தால் நல்லது!
தங்கும் இடத்துக்குப் போக உங்களுக்கு வழி தெரியுமா?
தெரியாது.

கவலையை விடுங்க. பிந்து உங்களுக்கு வழி காட்டுவாள்!
அடுத்த நிமிடம்—
எனக்கு நடனம் ரொம்ப பிடிக்கும்.
நீ ரொம்ப அழகா ஆடினே!
உண்மையாகவா?
தகுந்த பயிற்சி அளித்தால் உலகத்திலேயே சிறந்த நடனக்காரி ஆவாய்.
என்னுடன் வா! உன்னை ஒரு ஆடம்பர ஓட்டலில் ஆட வைக்கிறேன்.
என்ன?

ஆமா! நீ எங்களுடன் வருகிறாய்! மறுத்தால் மண்டையை குண்டு துளைக்கும்!
கடத்தல் பேர்வழிகள், ரகசிய குகைக்குள் நுழைந்து ஒரு பை நிறைய வைர நகைகளை அள்ளிக்கொண்டு கம்பி நீட்ட தயார் ஆனார்கள்.
குலாம்! நீ இந்தப் பெண்ணை தூக்கி வா. நான் இந்தப் பையை தூக்கி வருகிறேன்.
குலாம்! அங்கே போகக்கூடாது. என் பின்னால் வா! நான் வழி சொல்லுகிறேன்!
பிந்துவை கடத்தல் பேர்வழிகள் கடத்திச் சென்றது தெரியாமல், மாமன்னர் பீமாவும் ஆடிக் கொண்டு இருந்தார்.

இவளை தூக்கிச் செல்வது சுவையான இன்பம். ஆனா பாறை மாதிரி கனத்து கிடக்காள்!
இன்னும் கொஞ்ச தூரம் தூக்கி வா!
இரவோடு இரவாக 2 கடத்தல் பேர்வழிகளும் வேகவேகமாக நடந்தனர்.
தொடர்ந்து ரெண்டு நாள் இப்படி நடந்தால்தான், கீழே போய்ச் சேரமுடியும்.
விடியற்காலம். ஆட்டம் பாட்டம் முடிந்தது. மன்னர் பீமா, தனியாக தனது இருப்பிடம் திரும்பிக்கொண்டு இருந்தார். வழியில்—
அது என்ன? இந்த இருட்டில் ஒளி வீசும் பொருள் என்ன?
அதை எடுத்துப் பார்த்த மன்னர் திடுக்கிட்டார். அவர் முகம் கருத்தது.
உடனே அவர் மயில் சிம்மாசனம் இருந்த இடம் நோக்கி ஓடினார்.
அங்கே —
பிந்து எங்கே? விருந்தினர் 2 பேர் எங்கே?

வைரங்கள் சேமித்து வைக்கப்பட்டு இருந்த குகைக்கு போய் பார்த்த மன்னர்—
எல்லாம் தாறுமாருக கிடக்கு. வந்த 2 பேர்களும் வைரங்களுடன் ஓடிவிட்டனர்!
அடுத்த கணம் மன்னர் பீமா, கடத்தல் குலாம், சின்னு இருவரையும் பிடிக்க புறப்பட்டார்.
அவர்கள்தான் பிந்துவையும் கடத்திப் போய் இருக்கணும்!
ராம பக்த அனுமான் மாதிரி மன்னர் பீமா, தனது அரும் சக்தியால் வானில் பறந்தார்.
பல மைல் தூரத்தில்—
குலாம்! இதுதான் யோகம், அதிர்ஷ்டம் என்பது!
கடத்தல் தங்கக் கட்டிகளை பெறத் தவறினேம். ஆனு மதிக்க முடியாத வைரங்கள் கிடைத்து உள்ளன!
ஒரு அழகியும் கிடைத்து இருக்காள்!
எத்தர்களே! உங்களைக் காப்பாற்றிய மாமனிதருக்கு துரோகம் செய்துவிட்டீர்கள். இது பெரிய பாவம்!

பிந்து உன்னை மாதிரி ஒரு பேரழகியை அடைய எத்தனை ஆயிரம் பாவமும் செய்யலாம்! தப்பில்லே! வைரங்களைவிட உன் கண்கள் ஜொலிக்கின்றன!
குலாம்! இன்னும் நாம் நீண்ட தூரம் போக வேண்டி இருக்கு. நல்லா ஓய்வு எடு!
அப்போது—
பிரம்மச்சரிய விரதம் பூண்டு, பல அதிசய சக்திகளைப் பெற்றிருந்த பீமா வானில் பறந்து வந்துகொண்டிருந்தார்.
ஓர் இடத்தில்—
அதோ அவர்கள்!
அப்போது, பிந்துவுடன் குலாம், சின்னு இருவரும் ஒரு ஓடையைக் கடந்து போய்க் கொண்டு இருந்தனர். பிந்து எதிர்த்து பேசிக் கொண்டே போனாள்.
மன்னரிடம் திரும்பி விடுவோம். அவர் உங்களை மன்னிப்பார்!
உளராதே!
அவர் மாமன்னர் அபார ஆற்றல் கொண்டவர். அவர் உங்களை தப்பிப் போக விடமாட்டார்.

மன்னராவது மண்ணாங்கட்டியாவது. ஒரு காட்டுப் பயல் வைரங்களைக் கொள்ளை அடிச்சு பதுக்கி வைத்து இருக்கான்! நாம் விடிவதற்குள் தப்பிவிடலாம்!
அதோ, பார்!
அதோ, மாமன்னர்!
அந்த ஆள் இங்கே எப்படி வந்தான்?
டுமீல்... டுமீல்!
உடனே சின்னு துப்பாக்கியை எடுத்து மன்னர் பீமாவை சுட்டான்.
அதற்குள் பீமா தண்ணீரில் குதித்து விட்டார்.
குண்டு பாய்ந்து அந்த தடியன் தண்ணீருக்குள் விழுந்து விட்டான். கொஞ்ச நேரத்தில் உடல் ஊதி மிதப்பான்.
இருக்காது!

பிந்து! உங்க மன்னர் மறைந்துவிட்டார்! அவருக்கு எங்கள் இறுதி மரியாதை!
இனி அவசரமா தப்பி ஓட வேண்டியது இல்லை. ஓய்வு எடுத்துக்கொண்டு மெள்ள போகலாம்!
சின்னு! இந்த மலை பிரதேச மன்னர் இறந்துவிட்டார். எனவே இனி இங்கே நாம் மன்னர்களாகி, இங்கே உள்ள தங்கம், வைரம் அனைத்தையும் கொள்ளை அடித்தால் என்ன?
குலாம்! உன் யோசனை அபாரம்! இனி நாம் கோடீஸ்வரர்கள். ராஜபோகமாக வாழ கொடுத்து வைத்தவர்கள்!
இரவு முழுவதும் நடந்த களைப்பால் சின்னு படுத்து தூங்கிவிட்டான். பிந்துவும் கண் அயர்ந்தாள். குலாம் தூங்கவில்லை. அவன் மனம் ஒரு சுயநல திட்டத்தை உருவாக்கியது.
இந்த சின்னுவை தீர்த்து கட்டிவிட்டால், நான் மட்டும் மன்னன் ஆவேன். கோடிக்கணக்கான வைரம், தங்கம் கிடைக்கும், பிந்துவும் கிடைப்பாள்!

இந்த மாதிரியான பொன்னான சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. ஒரு பக்கம் வைரம், இன்னோர் பக்கம் பிந்து! ஆகா!
இனி, உலகமே என் கையில்!
அப்போது தண்ணீரில் குதித்து மூச்சை பிடித்து உள்ளே இருந்து, பிறகு மெள்ள வெளியே வந்த பீமா, குலாம் இருக்கும் இடம் நோக்கி மெள்ள வந்தார். அப்போது வெடிச் சத்தம் கேட்டது.
துப்பாக்கி குண்டு வெடிக்கும் சத்தம்! யார், யாரை சுட்டது? காரணம் என்ன?
பிந்து சீறினாள்.
கொடியவனே! நீ இந்த ஆளைக் கொன்றுவிட்டாய். பேராசை பிடித்த மிருகம் நீ!
பிந்து! உன்னை அடைய எதையும் செய்வேன்! நான் எனக்காக வாழும் லட்சியவாதி! இனி நாம் போவோம்!
எங்கே போவது?

மயில் சிம்மாசனம் உள்ள இடத்துக்குதான். இந்தக் கணத்தில் இருந்தே இந்த சுயம்பு மலையின் மன்னன் நான். நீ என் ராணி. என்னை யார் எதிர்த்தாலும், அவர்களை எமலோகம் அனுப்பிவிடுவேன்.
உம் யோசனை அபாரம். முதலில் என் கையை அவிழ்த்து விடும்!
பிந்து கைக் கட்டை குலாம் அவிழ்த்ததும் அவள் அவனை ஓங்கி குத்தினாள்.
கும்
கட்டை அவிழ்த்ததற்கு இதோ நன்றி!
குலாமை தாக்கிவிட்டு பிந்து தப்பி ஓடினாள். அந்த திடீர் தாக்குதலால் அதிர்ந்த குலாம், பிறகு துப்பாக்கியை தூக்கி சுட்டான்.
டுமீல்..
செடி கொடிக்குள் மறைந்து பிந்து பாம்பு போல் ஊர்ந்து சென்று

அவள் எங்கே? எந்தப் புதரில் மறைந்தாள்? அவளை எப்படியும் பிடிப்பேன்!
அப்போது 6 அடி உயரத்தில், ஆஜானுபாகுவான ஒரு உருவம் அவன் முன் தோன்றியது!
ஆ! இது என்ன?
ஆ! பேய்! காப்பாற்றுங்க!
பிந்து எங்கே சொல்! ... சொல் இல்லே உன்னே ...
நான் இங்கே இருக்கிறேன்!
மன்னர் சத்தம் கேட்டதும், மறைவிடத்தில் இருந்து பிந்து
பிந்து குரல் கேட்ட திசை நோக்கி மன்னர் பீமா திரும்பியபோது, குலாம் துப்பாக்கிப்–பிடங்கால், மன்னர் மண்டையில் அடித்தான்.
ஆ! ஐயோ அவன்!

அப்போது ஒரு பெண் அங்கே ஓடி வந்தாள்.
எஸ். பி. சார்! என்னைக் காப்பாற்றுங்க!
அந்தப் பெண் கடந்த வாரம் கடத்தப்பட்ட கிராமத்துப் பெண்.
பெண்ணே! என்ன நடந்தது சொல்!
கடந்த வாரம் உக்கம்சிங் என்னைக் கடத்திப் போனான்.
ஆமா! உன் கணவனையும் கொன்று விட்டான்.

அவள் அழுதாள்.
கணவனை இழந்து நிர்க்கதியாக நிற்கிறேன்.
என்னை எல்லோரும் கேவலமாகப் பேசுகிறார்கள்! அவமானம் தாங்க-வில்லை!
வாழ்வதா, சாவதா என்று புரியாமல் தவிக்கிறேன்!
பிறகு—
ஆசாத்!
இது பல பெண்களின் மானப் பிரச்சினை!
அந்தக் கொடியவன் உக்கம் சிங்கை பிடிக்க பல தடவை முயன்றேன். எப்படியோ தப்பி விடுகிறான்!
ஆனால் எப்படியாவது அவனைப் பிடிக்கணும். அதுக்கு ஒரு உபாயம் கண்டு பிடி!

அந்த நேரத்தில் உக்கம்சிங் ஒரு கிராமத்தில் போய்க் கொண்டு இருந்தான்.
டேய் தனூர்! யார் அந்த அழகி?
பெண் பித்து பிடித்த உக்கம் அந்த அழகியைப் பார்த்து மயங்கினன்!
என்னடா தனூர்! ரதி பூலோகம் வந்து விட்டாளா?
இந்தக் கிராமத்தில் இப்படி ஒரு அழகியை எதிர்பார்க்கவில்லை.
அவள் மீது ஆசை வேண்டாம்!

தனூர்! என்னடா, சொல்கிறாய்?
வெட்டிவா என்றால் கட்டி வரும் நீயா இப்படிச் சொல்கிறாய்?
ஆமா! காரணம் அவளைப் பற்றி எனக்குத் தெரியும்!
யார் அவள்?
அவளை மறந்து விடுங்க!
அவளைத் தொட்டால் நம் கூட்டத்துக்கு பெரிய ஆபத்து!

என்னடா உளருகிறாய்? யார் அவன்? முதலில் அதைச் சொல்!
அவள், ஆசாத்தின் காதலி மீரா!
ஆசாத் காதலி என்றால் விடவே கூடாது!
எஸ். பி. ஆபீசில்—
வா ஆசாத்! உக்கம்சிங் பற்றி தகவல் உண்டா?
உடனடியா பேசவேண்டிய ஒரு முக்கிய விஷயம் இருக்கு!
எனக்கு ஒரு ரகசிய தகவல் கிடைத்தது.

அதாவது நீங்க எச்சரிக்கையாகவும் பாதுகாப்பாயும் இருக்க வேண்டும்!
என்ன சொல்–கிறாய்?
உக்கம், என்னைக் கடத்திபோய்–விடுவான் என்கிறாயா?
எனக்கு கிடைத்த தகவல்படி, உக்கமின் ஆள் ஒருவன் உங்க பங்களாவை கண்–காணிக்கிறான்!
காரணம் என்ன?
உங்க மகள் மீரா மீது உக்கம் ஒரு கண் வைத்து இருப்பதா தெரியுது!

அதைக் கேட்டு எஸ். பி. அதிர்ச்சி அடைந்தார்.
அப்படியானால் உக்கம்சிங் இப்போது நம்முடன் நேரடியாக மோதுகிறான் என்று அர்த்தம். இது மிகப்பெரிய சவால்!
என் மகள் மீரா உன் காதலி. எனவே இருவருக்கும் அவமானம்!
ஆமா, சார்!
கொள்ளையர் மறை-விடத்தில்—
தலைவரே உக்கம் சிங்! மீராவை அபேஸ் செய்ய அருமையான சந்தர்ப்பம் கிடைச்சு இருக்கு!
அவள் ஒரு ஜீப் காரில் போகிறாள்.
அப்படியா? எங்கே?
இன்னும் சில நிமிடங்களில் அதோ அந்த ரோட்டின் வழியா அந்த ஜீப் போக இருக்கு!

அவனுடன் வேறு யார் இருக்கிறார்கள்?
பாதுகாப்பாக சில போலீசார் இருக்காங்க. ஒரு 5 வயது சிறுவனும் இருக்கிறான். அது அவன் தம்பியா இருக்கும்!
உம்... எல்லோரும் தயார் ஆகுங்க!
உடனே கொள்ளையர் அனைவரும் குதிரைகளில் ஏறினர்.
பிறகு—
உக்கும்! ஜீப் வரும் சத்தம் கேட்குது. முன் விளக்கு வெளிச்சமும் தெரியுது!
இந்தப் பக்கம் கொள்ளையர் பயம் உண்டா?

தெரியவில்லை. ஆனால் நாம் நகரை விட்டு புறப்பட்டு வருவது ஒருவருக்கும் தெரியாது.
திடீர் என்று ஜீப்பை நோக்கி துப்பாக்கி குண்டுகள் பறந்து வந்தன!
ஜீப்பில் இருந்த ஆசாத்தும், மற்ற போலீசாரும் திருப்பிச் சுட்டனர்.
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
கொள்ளையர் நம்மை சூழ்ந்து உள்ளனர்.
அதனால் இங்கு இருந்து தப்பி போய் விடுவோம்!

உடனே மீரா ஜீப்பில் ஏறினாள்.
விடாதீங்க! துரத்திப்பிடியுங்க! அவளைத்தூக்கி வாங்க!
பிறகு.
பெரிய கண்டத்தில் இருந்து தப்பினோம்.
நம் பரத கண்டம் இப்படி இருக்கு!
அதை மறந்து விடு. கொள்ளையர் கொட்டம் ஒரு நாள் அடங்கியே தீரும்!
ஐயோ! என் சின்னத்தம்பி ராகுல் எங்கே?
சிறுவன் ராகுல் கொள்ளையரிடம் மாட்டிக் கொண்டதை அப்போதுதான் உணர்ந்தனர்.

கொள்ளைக் கூட்டத்தில்—
உக்கம் சிங்! மீராவை மறந்துவிடு. வேறு எத்தனையோ பெண்கள் உள்ளனர்!
அவளை மறக்க முடியாது. அவளை எப்படியாவது தூக்கி வா!
அது நடக்கவே நடக்காது உக்கம்!
அதை எப்படி நடத்திக் காட்டுவது என்று எனக்குத் தெரியும்!
அந்த சிறுவன் எப்படி இருக்கிறான்?
நம் பாதுகாப்பில் பத்திரமா இருக்கான்.

இப்போ என் திட்டம் புரிகிறதா?
உக்கம்! நீ பெரிய புத்திசாலி! இப்போதே நான் செய்தி அனுப்புகிறேன்.
மறுநாள்.
அது என்ன தான் சார்?
இந்த மரத்தில் இந்த தாள் ஒட்டப்பட்டு இருந்தது.
அதில் என்ன எழுதி இருக்கு?
உக்கம் சிங் பேரம் பேச நினைக்கிறான்.

என் மகன் ராஜுலே விடுவிக்க வேண்டும் என்ருல் மீரா அங்கே தனியா போகணுமாம்!
வேறு வழி இல்லாமல் மீராவை தனியாக அனுப்ப எஸ். பி. முடிவு செய்தார்.
அப்படி - யானுல் நான்தான் உங்க மகள் மீரா!
நான் மீரா மாதிரி மாறுவேடம் போடுகிறேன்!
என்ன?
கொள்ளேயர் கண்டு பிடித்து விட்டால்...?
பிறகு—
எப்படி மாறு வேடம்?
பரவாயில்லே. மீரா மாதிரி தோற்றம் இருக்கு!
ஆசாத்! நீ புறப்படும் முன் உன் துப்பாக்கி இருக்கிறதா என்று பார்!

இந்த பையில் இருக்கு!
ரேடியோ கருவி?
அதுவும் அதில்தான் இருக்கு!
போய், வா!
போகப் போக தகவல் அனுப்பிக் கொண்டிரு. 2 சப்-இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் போலீசார் உன்னை பின் தொடர்வார்கள்.
ஆசாத்தை ஏற்றிக் கொண்டு போலீஸ் ஜீப் போனது.
என்னைப் பெண் என்றே அனைவரும் நினைப்பார்.

மலைப்பகுதி வந்ததும் ஆசாத் எஸ். பி. க்கு செய்தி அனுப்பினார்.
கருமலைப் பகுதியில் இருந்து சம்பல் பள்ளத்தாக்கினுள் நுழைகிறோம்.
சில கொள்ளையர் வரிசையாக நிற்பது தெரிகிறது!
மீரா வேஷத்தில் இருந்த ஆசாத் கொள்ளையர்களால் குறிப்பிடப்பட்ட இடத்துக்கு போனதும் அதிர்ச்சி—
ஆசாத் வரவேண்டும்!
ஐயோ! தெரிஞ்சு போச்சே!
ஆசாத்! நீர் வேறு கொள்ளைக்காரர்களை ஏமாற்றலாம். ஆனால் என்னை ஏமாற்ற முடியாது.

இந்த மாறுவேட உத்தி எல்லாம் என்னிடம் நடக்காது. நான் கடப்பாறையை விழுங்கி, கஷாயம் குடிப்பவன்!
ஆசாத் மாறுவேடத்தை கலைத்தார்.
உக்கம், உனக்கு என்ன வேணும்?
அதுதான் உமக்கு நன்றாகத் தெரியுமே!
அது நடக்காது உக்கம்! மீரா என் காதலி. எஸ். பி. யின் மகள்!
மீராவை என்னிடம் ஒப்படைக்காவிடில், அந்தச் சிறுவனுடன் உம்மையும் அடைப்பேன்.
இந்த முட்டாளை குகையில் போட்டு அடையுங்க! சீக்கிரம்! உம்...!

துப்பாக்கி, ரேடியோ கருவி இவற்றை எடுத்துக் கொண்டு ஆசாத்தை ஒரு குகைக்குள் தள்ளினர்.
ஏய் ராகுல்!
ஆசாத் மாமா!
ஆசாத் ஜீப்பை பின்தொடர்ந்து வந்த போலீசார் மேற்கொண்டு தகவல் எதுவும் கிடைக்காததால் திகைத்து நின்றனர்.
கருமலை வழியா போவதா கடைசி செய்தி வந்தது.
கருமலை.
உக்கம் சிங்,, ஆசாத்தை அடையாளம் கண்டு கொண்டு சிறை வைத்து இருக்கவேண்டும்.
எஸ். பி. ஆபீசில்—
அப்பா! ஆசாத்தை உக்கம் சிங் பிடித்து விட்டானுமே!
அது உனக்கு எப்படித் தெரியும்?

அவரை நீங்க தனியா அனுப்பியது தப்பு.
பாதுகாப்புடன் தான் அனுப்பினேன்!
பாதுகாப்புக்கு போன போலீசார் எங்கே இருக்காங்க?
பின் தொடர முடியாமல் அவர்கள் திரும்பி விட்டார்கள்.
பிறகு?
ராகுல், ஆசாத், இருவரையும் பிடித்துக்கொண்டு உன்னை பிடிக்க உக்கம் சிங் திட்டம் போடுகிறான். நீ ஜாக்கிரதையா இரு!
மீராவை பாதுகாக்க, எஸ். பி. தன் பங்களாவில் பாதுகாப்பை அதிகரித்தார்.
அன்று இரவு மீராவுக்கு தூக்கம் வரவில்லை.
தம்பியையும், ஆசாத்தையும் விடுவிக்க ஏதாவது செய்து ஆகணும்!

நள்ளிரவில் மீரா, பால்கனியில் இருந்து ஒரு கயிற்றை கீழே போட்டாள்.
பாதுகாப்பு போலீசாருக்கு தெரியாமல் இறங்க வேண்டும்.
பிறகு அவள் சம்பல் பள்ளத்தாக்கை நோக்கி நடந்தாள்.
கொள்ளையர் இருப்பிடத்தை எப்படி கண்டு பிடிப்பது? ஏதோ சத்தம் கேட்கிறதே!
திடீர் என்று மீராவைச் சுற்றி கொள்ளையர்!
ஐயோ!

உக்கம் முன் மீரா—
வா மீரா வா. பலநாள் கனவு நினைவு ஆகிறது.
எனது கனவுக் கன்னியே! உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?
உக்கம் சிங்!
ஆசாத்தையும் என் தம்பியையும் விடுதலை செய்!
சரி! விடுதலை செய்கிறேன்!
இப்பவே விடுவி!
அடேயப்பா என்ன அவசரம்!
உக்கம்! என் கையை பார்!
எஸ். பி. குடும்பத்தில் இன்னொரு முட்டாள்! அஃ! அஃ! அகா!

இந்த உக்கம் சிங்கின் தர்பார் உனக்குத் தெரியாது. இதோ பார்!
அடுத்த விநாடி அவளைச் சுற்றி கொள்ளையர் தோன்றினர்.
அடக்கடவுளே!
துப்பாக்கியுடன் சூழ்ந்த கொள்ளையரைப் பார்த்து மீரா கோபம் கொண்டாள்.
கோழைகளே!
மீரா! கோபம் கொள்ளாதே! இந்தா, இதைக் குடி.

ஓ முட்டாளே! நீ ஒரு துன்மார்க்கன்! கொடியவன்! கொலைகாரன்!
மீரா! ஆசாத்தை உயிருடன் பார்க்க வேண்டுமா, வேண்டாமா?
உக்கம் சிங் ஆபத்தானவன் என்பது மீராவுக்கு தெரியும்.
ஆசாத் வேண்டும்.
அப்படியானால் நான் சொல்வதைச் செய். இதைக்குடி!
உன் தம்பியையும், உன் காதலனையும் உயிருடன் பார்க்க நான் சொல்வதை நீ கேட்க வேண்டும்!
தோழர்களே! எங்களை தனியாக விட்டு விட்டு போங்க!

மற்ற கொள்ளையர் அங்கிருந்து போனதும்—
மீரா! என் இதய ராணி! உனக்காக நான் ஏங்கித் தவித்துக் கொண்டு இருந்தேன்!
ஆசாத்தும், ராகுலும் இருந்த குகையில்
ராகுல்! ஒரு சிறிய சுரங்கப்பாதை அமைத்து இருக்கேன். வா, போகலாம்!
இந்தச சுரங்கப்பாதை வழியாக பக்கத்துக் குகைக்குப் போய், அங்கு இருந்து வெளியேறி விடலாம்.
இருவரும் தவழ்ந்து, தவழ்ந்துசென்றனர்.
சத்தம் போடாமல் பின் தொடர்ந்து வா!
உம், பக்கத்து குகைக்கு வந்து விட்டோம்!
திடீர் என சிறுவன் அதிர்ந்து—
பேய்! பேய்!

அவர்கள் கண்களை அவர்களாலேயே நம்ப முடியவில்லை!
மனித எலும்புகள்! என்ன பயங்கரம்!
மாமா! இந்தப் பெண்ணுக்கு கொஞ்சம் உயிர் இருக்கு!
யார் இவள்? இந்த நிலை எப்படி ஏற்பட்டது?
யார், யார் நீங்கள்?

நான் போலீஸ் இன்ஸ்பெக்டர். பெயர் ஆசாத். எங்களுக்கு வழி தெரியவில்லை.
நே...ரே போங்க... பிறகு வலது புறம் தி...ரு...ம்...பு...ங்...க.
இவள் இறந்து விட்டாள்!
பிறகு ஆசாத், தொடர்ந்து ரகசிய சுரங்கப் பாதையை தோண்டும் வேலையில் ஈடுபட்டார்.
ராகுல்! முடிந்தது. இந்த ஒரு பாறையை எடுத்தால், மேல் மட்டத்தை அடையலாம்.
சுரங்கப் பாதையில் இருந்து வெளியே வந்தபோது—
நமக்கு அதிர்ஷ்டம் இல்லை. நாம் இன்னோர் குகைக்கு வந்து இருக்கோம்!
மாமா! யார் இந்தப் பெண்கள்?
இவர்களும் தூக்கி வரப்பட்ட பெண்களா?

பயப்படாதீர்! நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆசாத்!
இன்ஸ்பெக்டர்?
எங்களை காப்பாற்றுங்க!
உதவி செய்யுங்க!
எங்களை விடுவியுங்க!
கொடியவன் உக்கம் எங்களை தூக்கி வந்து அடைத்து வைத்து இருக்கான்!
எங்களைத் தூக்கி வந்து பணயப் பணம் வாங்கிவிட்டான். என்றாலும் எங்களை விடுவிக்க மறுக்கிறான்!
உக்கம் சிங் அநியாயத்துக்கு முடிவு கட்டும் நேரம் நெருங்கி விட்டது!

சார்! உடனடியா செயல்படுங்க! உங்க காதலி மீராவையும் தூக்கி வந்து இருக்கான்.
அப்படியா? இதோ!
வெறி கொண்ட உக்கம், மீராவை சங்கடப் படுத்தி குடிக்கும்படி கட்டாயப் படுத்தினன்.
முடியாது! குடிக்க மாட்டேன்! உதவி! உதவி!
டமார் என்று—
ஆசாத்!

ஆசாத் திடீர் என்று புலிபோல் பாய்ந்து, உக்கம் சிங்கை கடுமையா தாக்கினார்.
ஆ!
சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து இருந்த பெண்கள் "போர்" தொடங்கினர்!
சிறுவன் ராகுல் கூட கோபம் கொண்டு தாக்கினான்!
அப்போது எஸ். பி. போலீஸ் படையுடன் அங்கே வந்து சேர்ந்தார்.
பெண்கள் வீரமாக சண்டை போடுகிறார்கள்!
ஆட.பெண்கள் வீசிய ஒரு ஆயுதம் என்னையும் தாக்கிவிட்டதே!

பெண்களின்
வீரப்போரை பார்க்கும்
போது, நாம் தலையிடத்
தேவை இல்லை
போலிருக்கே!
பெண்கள் கொள்ளையரை
செம்மையாக உதைத்தனர்.
ஆ!
தட்!
ஐயோ!
திடீர் தாக்குதலால்
உக்கம்
நிலைகுலைந்தான்.
எல்லோரும்
தப்பி
ஓடுங்க!
கொள்ளையரைப் பெண்கள் மிதித்து தள்ளினர்.
உதவி.
தட்.
உம்!
போலீஸ்
வேன் கதவைத்
திறங்க!
அவர்களே
ஏறிக்கொள்-
வார்கள்!

அடி—உதை தாங்க முடியாத கொள்ளையர், தப்பவும் முடியாமல் போலீஸ் வேனைத் தஞ்சம் அடைந்தனர்.
உக்கம் சிங் உள்பட எல்லா கொள்ளையரும் பிடிபட்டனர்.
சார்! எல்லோரும் ஏறியாச்சு! கதவை அடைக்கிறேன்.
பெண்களும் மீட்கப்பட்டனர்.
பெண்களே! உங்கள் வீரம், மன உறுதி, தைரியம் மூன்றும் பாராட்டத் தக்கது!
உங்களை எல்லாம் வைத்து, தமிழ் நாட்டைப் போல் மத்தியப்பிரதேசத்திலும் பெண் போலீஸ் தொடங்கலாம் என நினைக்கிறேன்!
நாங்கள் தயார்! கொள்ளையர் கொட்டம் அடக்க எந்தத் தியாகமும் செய்வோம், சார்!
முற்றும்

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்...!

ஜேம்ஸ் பாண்ட் துப்பறியும்,

கடலில் பூதம்!

முழு நீள சித்திரக் கதை!

சித்ரா மஞ்சுளன் எழுதும் **தொடர் கொலை!**

திகில் தொடர்கதை!

ரூ.50 பரிசு: வாசகர் போட்டி!

படிக்கத் தவறாதீர்கள்!

ராணி காமிக்ஸ்

1.2.86-ல் வெளிவருகிறது